வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 06.07.2025 நேரம் மாலை 6.10

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது 5 நாடுகள் பயணத்தின் 4-ஆவது கட்டமாக இன்று பிரேசில் சென்றுள்ளார்.

கட்டுப்பாட்டு நிபுணர்கள் மாநாடு 2025-ஐ பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நாளை புதுடெல்லியில் தொடக்கி வைக்கிறார்.

சுதந்திரப் போராட்ட வீரரும் ஜனசங்க நிறுவனருமான சியாமா பிரசாத் முகர்ஜியின் 124-ஆவது பிறந்த நாளை ஒட்டி, தலைவர்கள் நினைவஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன் ராமின் நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது.

மோடி-பிரேசில்

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது 5 நாடுகள் பயணத்தின் 4-ஆவது கட்டமாக இன்று பிரேசில் சென்றுள்ளார். ரியோடி-ஜெனிரோவில்

பிரதமருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரதமரின் பிரேசில் பயணம் பற்றிய ஒரு செய்தி தொகுப்பு...........

(வாய்ஸ்)

மோடி-பிரேசில்

(வாய்ஸ்)

ரியோடி-ஜெனிரோவில் நடைபெறும் 17-ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்கிறார். முன்னதாக அந்நாட்டு அதிபர் திரு லூயி இனாசியோ லூலாவுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துகிறார். உலகளாவிய நிர்வாக சீர்திருத்தம், அமைதி, பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவின் முறையான பயன்பாடு, நிதி உள்ளிட்ட விஷயங்கள் குறித்து விவாதிக்க உள்ளார். அதனைத் தொடர்ந்து பிரேசிலியா செல்லும் பிரதமர் பிரேசில் அதிபர் திரு லூயி இனாசியோ லூலா-வுடன் பலர் முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாட உள்ளார்.

இம்மாநாட்டின் ஒரு பகுதியாக பல்வேறு நாட்டு தலைவர்களையும் திரு நரேந்திர மோடி சந்தித்து பேச உள்ளார்.

முன்னதாக தனது அர்ஜென்டினா பயணத்தின் போது பிரதமர் திரு நரேந்திர மோடி அந்நாட்டு அதிபர் திரு சேவியர் மில்லியுடன் வர்த்தகம்,தொழில் நுட்பம், பாதுகாப்பு, விண்வெளி, சுகாதாரம் மற்றும்

மருந்துவம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையிலான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டார். 57 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் அர்ஜென்டினாவிற்கு மேற்கொண்ட முதல் இருதரப்பு பயணம் இது என்பது குறிப்பிடத் தக்கது.

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது பயணத்தின் 5-ஆவது மற்றும் இறுதி கட்டமாக நமீபியா செல்ல உள்ளார்.

*நிர்மலா சீதாராமன்*

பிரிக்ஸ் நாடுகளின் நிதியமைச்சர்களுடன் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதித்தார். பிரிக்ஸ் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தின் போது ரஷ்ய நிதி அமைச்சர் திரு ஆன்டன் சிலுவானோவ் உடனான சந்திப்பின் போது நிதித் துறையில் உள்ள பிரச்சனைகள் மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி தொடர்பான ஆலோசனைகளை மேற்கொண்டார். தொடர்ந்து சீன நிதியமைச்சர் திரு லான் ஃபோனையும் திருமதி நிர்மலா சீதாராமன் சந்தித்து பேசினார். அப்போது இந்தியா-சீனா இடையிலான ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது அவசியம் என்று நிதியமைச்சர் வலியுறுத்தினார். மேலும், உலகின் மிக வேகமாக வளரும் பொருளாதார நாடுகள் என்ற அடிப்படையில் உலகளாவிய உள்ளடக்கிய வளர்ச்சி

மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் இரு நாடுகளும் முன்னிலை வகிப்பதாக கூறினார்.

*ராஜ்நாத் சிங்*

பாதுகாப்பு நிதி மற்றும் பொருளாதாரம் மூலம் நிதி ஆலோசனை, பணம் செலுத்துதல், தணிக்கை மற்றும் கணக்கியல் ஆகியவற்றை கருப்பொருளாக கொண்ட கட்டுப்பாட்டு நிபுணர்கள் மாநாடு 2025 நாளை புதுடெல்லியில் தொடங்க உள்ளது. 3 நாள் நடைபெறும் இம்மாநாட்டினை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நாளை தொடக்கி வைக்கிறார். பாதுகாப்பு கணக்குத் துறை நடத்தும் இம்மாநாட்டில் பட்ஜெட் மற்றும் கணக்கு சீர்திருத்தம், கூட்டு ஆராய்ச்சி, விலை நிர்ணயம், புதுமை மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட 8 உயர்மட்ட வணிக அமர்வுகள் நடைபெற உள்ளன. இம்மாநாட்டின் தொடக்க அமர்வில் பாதுகாப்பு படைத் தலைவர் ஜென்ரல் அனில் சவ்கான், முப்படைத் தலைவர்கள், பாதுகாப்பு செயலர் திரு ராஜேஷ்குமார் சிங், பாதுகாப்பு படைகளின் நிதி ஆலோசகர் திரு தஸ்திதர் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

*ஜூனோடிக் டி*

உலக ஜூனோடிக் நோய் தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவும்

நோய்களை தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

லூயி பாஸ்டர் நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ரேபீஸ் தடுப்பூசியை வெற்றிகரமாக பரிசோதித்ததை நினைவு கூறும் வகையிலும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. இந்தியாவில் 2030-ஆம் ஆண்டிற்குள் ரேபிஸ் நோயை முற்றிலும் ஒழிக்கும் வகையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம் தெரிவித்துள்ளது. நாட்டில் ஆண்டு தோறும் 91 லட்சம் பேர் ரேபிஸ் பாதிப்புகளுக்கு உள்ளாவதாகவும் இவர்களில் 5 ஆயிரத்து 726 பேர் உயிரிழக்க நேரிடுவதாக அந்தக் குழுமம் தெரிவித்துள்ளது. 14 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் ரேபிஸ் தடுப்பூசியை கட்டாயம் செலுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*சியாமா பிரசாத்*

சுதந்திரப் போராட்ட வீரரும் ஜனசங்க நிறுவனருமான சியாமா பிரசாத் முகர்ஜியின் 124-ஆவது பிறந்த நாளை ஒட்டி, தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தி உள்ளனர். இதுகுறித்த செய்தி தொகுப்பு

(வாய்ஸ்)

*சியாமா பிரசாத்*

(வாய்ஸ்)

நாட்டின் கவுரவம், கண்ணியம், மற்றும் நன்மதிப்பை பேணிக் காப்பதற்காக தனது வாழ்க்கையை தியாகம் செய்தவர் சியாமா பிரசாத் முகர்ஜி என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள சியாமா பிரசாத் முகர்ஜியின் படத்திற்கு மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா, மத்திய அமைச்சர் திரு ஜேபி நட்டா, மாநிலங்களவை துணைத் தலைவர் திரு ஹரிவந்த் சிங் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் தகவல் ஒலிபரப்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, உள்ளிட்டோரும் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் சமூக வலைதளப் பதிவில் சியாமா பிரசாத் முகர்ஜிக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். தேசிய ஒறுமைப்பாட்டிற்காக அயராது பாடுபட்டவர் என்றும் நாட்டின் ஒற்றுமைக்காக தன்னலமற்ற அர்ப்பணிப்பு உணர்வுடன் அவர் ஆற்றிய பணிகள் மக்களுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது என்றும், டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

புதுச்சேரி அரசு கலை பண்பாட்டு துறை சார்பில் டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜியின் பிறந்த நாள் விழா கடற்கரை சாலையில் அமைந்துள்ள புதுச்சேரி நகராட்சி அரங்கில் இன்று கொண்டாடப்பட்டது. துணை நிலை

ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வ கணபதி, சட்டமன்ற உறுப்பினர் திரு சாய் ஜே சரவணன் குமார், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான், கலை பண்பாட்டுத் துறை செயலர் திரு முகமது அஹ்சன் அமீத் உள்ளிட்டோர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முகர்ஜியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து டாக்டர் சியாமா பிரசாத்தின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்பட கண்காட்சியை துணை நிலை ஆளுநர் மற்றும் முதலமைச்சர் திறந்து வைத்து பார்வையிட்டனர்.

*நீரஜ் சோப்ரா*

பெங்களுருவில் நடைபெற்ற **நீரஜ் சோப்ரா கிளாசிக் 2025** தடகள போட்டிகளில் ஒலிம்பிக் வீரர் நீரஜி சோப்ரா 86.18 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தங்கப் பதக்கம் வென்றார்.

*எல் முருகன்*

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் நாளை காலை 10 மணி அளவில் சென்னை கே கே நகரில் உள்ள ஈஎஸ்ஐசி மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா சுகாதார சேவைகளை தொடக்கி வைக்கிறார். நோய் தடுப்பு சுகாதார பரிசோதனை முகாம் மற்றும் மூத்த

குடிமக்கள் உள்ளிட்ட பயனாளிகளுக்கான மருத்துவ உபகரணங்களை வழங்குதல் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

*ஜெகஜீவன் ராம்*

முன்னாள் இந்திய துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன் ராமின் நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி, லாஸ்பேட்டை ஏர் போர்ட் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வ கணபதி, சட்டமன்ற உறுப்பினர் திரு சாய் ஜே சரவணன் குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*காரைக்கால்*

காரைக்கால் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் பருத்திக்கான மறைமுக ஏலம் நடைபெறுகிறது. பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் இந்த ஏலத்தில் பங்கு கொண்டு தங்களது பருத்தியின் தரத்திற்கு ஏற்ப சரியான எடைக்கு போட்டி விலையில் விற்று அதிக லாபம் பெறலாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நேற்று நடைபெற்ற ஏலத்தில் சராசரி விலையாக 1 கிலோ 70.52 ரூபாய்க்கு வியாபாரிகளால் ஏலம் எடுக்கப்பட்டது.

*கைலாஷ்-மானசரோவர்*

கைலாஷ்-மானசரோவர் யாத்திரையை முடித்துக் கொண்டு 2-ஆவது குழு இன்று காங்டாக் திரும்பியது. 47 யாத்திரிகர்களைக் கொண்ட இந்த குழு கடந்த மாதம் 25-ஆம் தேதி நாதூ லா எல்லையைக் கடந்து யாத்திரைக்கான பயணத்தை தொடங்கியது. சிக்கிம் அரசின் விருந்தோம்பல் மற்றும் தடையற்ற ஏற்பாடுகளுக்கு யாத்திரிகர்கள் தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர். முன்னதாக கடந்த மாதம் 20-ஆம் தேதி நாதூ லா-வில் தொடங்கிய கைலாஷ் மானசரோவர் யாத்திரையை அம்மாநில ஆளுநர் திரு ஓம் பிரகாஷ் மாதூர் கொடி அசைத்து துவக்கி வைத்தது குறிப்பிடத் தக்கது.

*வானிலை*

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் ஓரிரு இடங்களில் பலத்த தரை காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மல்யுத்தம்*

கிர்கிஸ்தானில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் மல்யுத்த போட்டியில் ஆடவர் 48 கிலோ எடைப் பிரிவில் இந்திய வீரர் அபிஷேக்

வெள்ளிப் பதக்கம் வென்றார். 68 கிலோ எடைப் பிரிவில் பர்ணம் வெங்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி தனது 5 நாடுகள் பயணத்தின் 4-ஆவது கட்டமாக இன்று பிரேசில் சென்றுள்ளார்.

கட்டுப்பாட்டு நிபுணர்கள் மாநாடு 2025-ஐ பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நாளை புதுடெல்லியில் தொடக்கி வைக்கிறார்.

சுதந்திரப் போராட்ட வீரரும் ஜனசங்க நிறுவனருமான சியாமா பிரசாத் முகர்ஜியின் 124-ஆவது பிறந்த நாளை ஒட்டி, தலைவர்கள் நினைவஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன் ராமின் நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/06.07.2025/Script.

--------------------------